Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 04 உ. ஞாயிற்றுக்கிழமை (21 - 10 - 1990) ஹிஜ்ரீ 1410 ற. அவ்வல் 30 கதிர்: 228

# பலாலியிலிருந்து வெளியேறி காங்கேசனுக்கு வர முயற்சி!

## வயாவிளானில் பின்சென்றது படை; கட்டுவனில் 2 டாங்கிகள் சேதம்!

யாழ்ப்பாணம், அக்டோபர் 21

**பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று இரு முனைகளில் வெளியேறிய இராணுவத்தினர் அங்கிருந்து காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை முகாமை நோக்கி முன்னேற முற்பட்டபோது பெரும் சண்டை மூண்டது. நேற்று மாலை வரை பல பகுதிகளில் சண்டை நடந்து கொண்டிருந்தது. இந்தச் சண்டையில் இராணுவத்தினரின் இரு டாங்கிகள் சேதமுற்றதாகத் தெரியவந்தது.**

*இதேசமயம் –*

*வயாவிளான் மத்திய மகாவித்தியாலயப் பகுதியில் விடுதலைப் புலிகளினால் நேற்று முன்தினம் வியூகம் அமைக்கப்பட்டே – சுற்றிவளைக்கப்பட்டு – தாக்கப்பட்ட இராணுவப் படைப் பிரிவு, நேற்று அங்கிருந்து பின்நோக்கிச் சென்று, வயாவிளானில் தமது பழைய சென்றிகளுக்குள் புகுந்து கொண்டது.*

பலாலி இராணுவ முகாமில் இருந்து மயிலிட்டிப் பக்கத்திலும், கட்டுவன் சந்திப் பக்கத்திலும் படையினர் முன்னேற முயன்றதை அடுத்தே நேற்று மோதல் ஏற்பட்டது.

கட்டுவன் சந்திப் பக்கமாக படையினர் கவச வாகனங்கள் சகிதம் முன்னேறியதாகவும்–

அவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டதாகவும் –

இரண்டு கவச வாகனங்கள் சேதமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம்—

கட்டுவன், மயிலிட்டிப் பகுதிகளில் வெளியேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சாந்தைச் சந்தி, தையிட்டி. ஆவளைச் சந்தி ஆகிய பகுதிகளில் கடும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

வீமன்காமம், மாவிட்டபுரம் பகுதிகள் ஷெல், பீரங்கி மற்றும் துப்பாக்கி வேட்டுக்களினால் அதிர்ந்து கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5-68)

## வீமன்காமம் பகுதியில் நேற்று மாலை குண்டுவீச்சு

தெல்லிப்பழை. அக். 21

தெல்லிப்பழை, வீமன்காமம் பகுதியில் நேற்று மாலை மூன்று பொம்மர்கள் வட்டமிட்டுத் தாக்குதல் நடத்தின.

இப்பகுதியில் நான்கு குண்டுகள் வீசப்பட்டன. அவற்றில் இரண்டு குண்டுகளே வெடித்தன.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்குப் பின்பக்கமாக வீமன்காமத்தை அண்டியே இரு குண்டுகளும் விழுந்து வெடித்திருக்கலாம் என நம்பப்பட்டது. (ஒ-3-5)

## சுன்னாகம், ஏழாலை பகுதிகளில் ஹெலி மூர்க்கம்

தெல்லிப்பளை, அக் 21

தெல்லிப்பளையிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்றுக் காலையில் இருந்து மாலைவரை பொம்மர்களும், ஹெலிகளும் பரவலாக மூர்க்கத்தனமான தாக்குதல்களை நடத்தின.

காலையில் இருந்து தெல்லிப்பளை, ஏழாலை, மல்லாகம். சுன்னாகம், அளவெட்டிப் பகுதிகளில் ஹெலிகள் இடம்மாறி இடம் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தின.

பாதுகாப்புக் கருதி அந்தப் பகுதிகளில் இருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்த மக்கள் மீதும் ஹெலிகள் வேட்டுக்களைத் தீர்த்தன.

பன்னாலை, கொல்லன்கலட்டி பகுதிகளிலும் ஹெலி கிரனேட் தாக்குதல்களை மேற்கொண்டது.

ஹெலிகள் நடத்திய தாக்குதல்களினால் வீதிகளால் சென்றுகொண்டிருந்த மக்கள் அச்சம் கொண்டு பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கிக் கொண்டனர். (அ-3-5)

## பலாலி, காங்கேசனிலிருந்து பரவலாக ஷெல் தாக்கு

தெல்லிப்பளை, அக். 21

பலாலி, காங்கேசன்துறை முகாம்களில் இருந்து நேற்றும் அதிகாலை முதல் பரவலாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இளவாலை, அளவெட்டி, பன்னாலை, கருகம்பானை பகுதிகளிலேயே அனேக ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதனால் அந்தப் பகுதிகளில் உள்ள சில வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்தன.

இதேவேளை—

கீரிமலை, கருகம்பானை, அம்பனை, அளவெட்டி மற்றும் மாவிட்டபுரம் பகுதிகளை நோக்கி நேற்று கடுமையான பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது. [ஒ-3-5-68]

## உடைமைகளை எடுத்து வர சென்றோர் மீது சூடு!

தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளில் இருந்து அவசர அவசரமாக வெளியேறி வந்தவர்கள் பலர் மீண்டும் அப்பகுதிகளுக்கு நேற்று தமது உடைமைகளை எடுத்துவரச் சென்றனர்.

அப்படிச் சென்றவர்கள் மீது இராணுவத்தினர் சுட்டதில் சிலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் மூவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பளையில் வல்லிபுரம் பாலசிங்கம்[வயது 34], சின்னவன் சௌந்தரராசன் [வயது 32] ஆகியோரும், கட்டுவன் ஊரங்குனையில் பொன்னம்பலம்சின்னத்துரை [வயது 70] என்பவருமே காயமடைந்தனர். [ஒ-15]

## ராணுவ ஜீப் மீது தாக்கு! சிப்பாய்கள் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், அக். 21

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒட்டமாவடி இராணுவ முகாமிலிருந்து நாவலடிச் சந்தி இராணுவ முகாமை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

ஒட்டமாவடி முகாமில் இருந்து சுமார் ஐநூறு யார் தூரத்தில் வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஜீப் ஒன்று சேதமுற்றதாகவும் —

அந்த ஜீப்பில் வந்த இராணுவத்தினர் அனைவரும் உயிரிழந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## காரைநகருக்கு பல தடவை வந்த ஹெலி!

காரைநகர், அக். 21

புதிய ரக ஹெலி ஒன்று நேற்று பல தடவைகள் காரைநகர் படை முகாமுக்கு வந்து தரையிறங்கி மீண்டும் பலாலிப் பக்கமாகச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

உக்கிரமாக சண்டை நடந்து வரும் பலாலி, வயாவிளானுக்கு இங்கிருந்து படையினர் ஹெலி மூலம் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஒ-6)

## தையிட்டி வாசி மரணம்

யாழ்ப்பாணம், அக். 21

தெல்லிப்பளைச் சந்தியில் நேற்று முன்தினம் (வெள்ளி) காலை இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த தையிட்டியைச் சேர்ந்த செல்லம்மா வல்லிபுரம் (வயது 65) என்பவர் அன்றிரவு மரணமானார். (ஒ-15)

## ஆஸ்பத்திரி ஊழியர் நினைவு தினம்

யாழ்ப்பாணம், அக். 21

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த 22 பேர் கடமை நேரத்தில் கொலை செய்யப்பட்டு இன்றுடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்றன. [illegible] நோயாளர்களுக்குச் சிகிச்சை அளித்தும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மல்லாகத்தில் சகடைக் குண்டு! 8 பேர் காயம்; கடைகள் சேதம்

### ஒருவரின் கால் முற்றாக துண்டிப்பு

யாழ்ப்பாணம், அக். 21

மல்லாகத்தில் நேற்றுக் காலை சுமார் 6.15 மணியளவில சீனச்சகடை விமானம் குண்டு ஒன்றை வீசித் தாக்கியது.

இச்சம்பவத்தில் எண்மர் காயமடைந்தனர். அவர்களில் ஜீவா என்பவரது முழுக்காலும் துண்டிக்கப்பட்டு விட்டது. பிரஸ்தாப நபர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

குண்டு வீச்சினால் மல்லாகம் சந்திப் பகுதியில் உள்ள ஆறு கடைகள் சேதமடைந்தன. அவற்றில் இரு கடைகள் முற்றாக நாசமாகின.

மல்லாகம் மகாவித்தியாலயம், பழம் பிள்ளையார் கோயில் என்பனவும், உபதபால் நிலையம் அதனை அண்டிய சில கடைகளும் குண்டு வீச்சுத் தாக்குதலினால் பாதிப்புற்றன.

காயமடைந்த எண்மரும் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியைச் சேர்ந்தவரும், கடை ஒன்றின் உரிமையாளருமான செ. மரியதாஸ் புவனேந்திரம்[22 வயது] அவரது மருமக்கள் செல்வநாயகம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவிலும் நேற்று புலிகள் - ராணுவம் மோதல்

யாழ்ப்பாணம், அக். 21

நேற்று நண்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து படையினர் வெளியேற முற்பட்டதை அடுத்து அப்பகுதியில் மோதல் ஏற்பட்டது.

மோதல்களை அடுத்து இராணுவத்தினர் முகாமிற்குள் பின்வாங்கிச் சென்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## தள்ளாடி முகாமிலிருந்து ஷெல் வீச்சு; 6 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், அக். 21

மன்னார் மாவட்டத்தில் உள்ள தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து கடந்த புதனன்று இரவு 11 மணியளவில் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் தாழ்வுபாடு கிராமத்தில்வந்து விழுந்து வெடித்தன.

இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### றொலெக்ஸ் பேக்கரி

20-10-90 தொடக்கம் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியிலுள்ள எமது றொலெக்ஸ் பேக்கரி மீண்டும் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (14515)

### ஞானம்ஸ் ஸ்ருடியோ

மீண்டும் மேற்படி ஸ்தாபனம் தனது வழமையான சேவையை ஆரம்பித்துள்ளது அத்துடன் போட்டோஸ்ரட் செய்து கொடுக்கப்படும் 301, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சி-5326)

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலப் பெற்றோர் லண்டனில் Accountant ஆகத் தொழில் புரியும் 32 வயதுள்ள அழகிய பட்டதாரி C.I M.A கணக்காளர் மகனுக்கு லண்டன், கனடா, அவுஸ்திரேலியாவில் வசிக்கும். அல்லது லண்டனுக்கு அனுப்பக் கூடிய வசதியுள்ள படித்த அழகிய மணமகளை எதிர் பார்க்கின்றனர் C/o 150 உதயன் யாழ்ப்பாணம். [14507]

### ஆங்கிலம்

யூன் மாதத்தில் இருந்து இடை நிறுத்தப்பட்ட G C E (A/L) (O/L) ஆங்கில வகுப்புகளும் ஏனைய ஆங்கில வகுப்புக்களும் இம் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து நடைபெறுகின்றன புதிய பிரிவுகள் நவம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகும். வ. கோவிந்தபிள்ளை 62, பழம் றோட், கந்தர்மடம். (14506)

### இராவணன் கோட்டை

மீரா வெளியீடு சிறுவர்களுக்கான கதை மாயாஜால மந்திர தந்திர வீரதீரச் செயல்கள் நிறைந்தது துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, பிக்பென்ஸ் (B) கிளிநொச்சி, லக்கி புத்தகசாலை பண்டத்தரிப்பு, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். (14502)

### கல்வி

15 செம்மணி லேனில் அமைந்திருக்கும் 'சோதிடசேவை' இல்லத்தில் சோதிடமும், கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்றவரால் 6ஆம் தரம் முதல வாலிபர் யுவதிகளுக்கு சிறந்த முறையில் English கற்றுத் தரப்படும். வீடுகளிற்கு சென்றும் கற்பிக்கப்படும். தொடர்பு: குலசபாநாதன், 15 செம்மணி லேன, (தபால்கட்டை சந்திக்கு அருகில்) அரியாலை' யாழ்ப்பாணம். (14517)

---

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

## ஜெயசிலன் ஞானஈஸ்வரன்

(1ஆம் வருட. பொறியியல் மாணவன்
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 26 09 - 1964 | 21 - 10 - 1987 |

நண்பா!
நீ பாடித்திரிந்த
பாதைகளெல்லாம்
மௌனமாக
அழுது வடிந்து
கொண்டிருக்கின்றன

கண்ணீரின்
கதைதனை - எம்
கரங்கள்
மௌனத்தில்
எழுதிக்
கொண்டிருக்கின்றன

— சகமாணவ நண்பர்கள்.

[சி-5327]

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டியும், வீட்டுக்கிருத்திய
அழைப்பும் - நன்றிநவிலலும்
23 - 10 - 1990



மலர்வு:
19 . 01 . 1961

உதிர்வு:
09 . 09 . 1990

செல்வி

## வத்சலாதேவி. பொன்னுத்துரை

(B. Sc. Jaffna)

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பண்பின் உறைவிடமாய் வாழ்ந்து, எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்கொண்டு விட்ட எம் செல்வமே வத்சலா!

உன் ஆத்மா சாந்தியடைய என்றுமே
இறைவனை வேண்டிநிற்போம்!

அவர்களின் அந்தியேட்டி 22-10 1990 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் வேலணை வெள்ளைக் கடற்கரையிலும், வீட்டுக்கிருத்தியம் 23-10-1990 செவ்வாய்க் கிழமை பகல் 12 00 மணியளவில் எங்கள் இல்லத்திலும் நிகழும் இந்நிகழ்ச்சிகளில் கலந்து அன்னாரது ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புச் செல்வியின் அகால மரணமறிந்து எங்களின் ஆழ்ந்த துன்பத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அ. பொன்னுத்துரை குடும்பத்தினர்.

பொற்பதி,
வேலணை. (14512)

---

# 31 ஆவது நினைவு நாள்



## அமரர் பூதர் சக்கரை

(சங்கரப்பிள்ளை)

| மனிதனாக: | அமரனாக: |
|---|---|
| 04 - 06 - 1924 | 20 - 09 - 1990 |

எங்களை மறந்து நீங்கள்
ஏன் எங்கு சென்றிட்டீர்கள்
இங்கதை நினைத்து நாங்கள்
அழுகிறோம் அழுதிடாமல்
உணவினை உண்ணும் போதும்
உறங்கிடச் செல்லும் போதும்
மனதினை அடக்கிடாமல்
கண்ணீராய்க் கொட்டுகிறோம்
கண்ணிலே அமைந்தகுளம்
கரை உடைத் தோடி எங்கள்
மண்ணிலே நிறையும் காட்சி
கண்டிட வ திடுங்கள்

— ✶ —

எமது இல்லத்தில் 21-10-1990 இல் (ஞாயிறு) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி. [14513]

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



அமரர்
கோபாலபிள்ளை இராசப்பா

ஆண்டவன் படைப்பு: 11-12-1930



அமரர்
செல்வி சித்திரா இராசப்பா
B. Sc

ஆண்டவன் படைப்பு: 13-04 1968

ஆள்பவன் அழிப்பு: 08-09-1990

திதி: 22 — 10 — 1990

08 - 09 - 90 அன்று விமானக்குண்டு வீச்சினால் அகாலமரணமடைந்த திரு கோபாலபிள்ளை இராசப்பா, செல்வி சித்திரா இராசப்பா ஆகியோரின் அந்தியேட்டிக் கிரியைகள் 22 - 10 - 90 திங்கட்கிழமை நடைபெற உள்ளன. அன்று நடைபெற உள்ள மதிய போசனத்திற் கலந்து கொண்டு இருவரினதும் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களிற்கும், எனக்கு பலவழிகளில் உதவியும் ஒத்தாசையும் செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவரின் பிரிவால் துயருறும்:
திருமதி நா. இராசப்பா.

14 [illegible] ஜேன்.
யாழ்ப்பாணம். [14514]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்பத்திரிகளுக்கு டீசல் அனுப்ப அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், அக். 21

யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு மாதாந்தம் தேவைப்படும் 2 ஆயிரம் லீற்றர் (10 பரல்) டீசலைக் கூட கொண்டு வருவதற்கு சுகாதார அமைச்சுக்கு கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அனுமதி மறுத்து விட்டது.

யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளின் அம்புலன்ஸ்கள், ஜெனரேட்டர்கள் ஆகியவற்றை இயக்குவதற்காகவே இந்த டீசல் தேவைப்படுவதாக கூட்டுப்படைத்தலைமையகத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அண்மையில் கொழும்புக்கு சென்றிருந்த சுகாதாரசேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை கொழும்பில் சுகாதார அமைச்சு அதிகாரிகளை சந்தித்து இது சம்பந்தமாக பேச்சு நடத்தியிருந்தார்.

அதனையடுத்து சுகாதார அமைச்சு கூட்டுப்படை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட போதே அனுமதி மறுக்கப்பட்டது.

மீண்டும்சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பிராந்தியப் பணிப்பாளர் தொடர்பு கொண்டதையடுத்து அடுத்த வாரமளவில் இங்கு வர இருக்கும் கப்பல் மூலம் ஒரே ஒரு பரல் டீசலை மட்டும் அனுப்ப அனுமதி கிடைத்ததாகத் தெரிய வந்தது. [உ 6)

## வீடுகளை இழந்தோரை வெள்ளமும் விரட்டுகிறது!

யாழ்ப்பாணம், அக் 21

வெள்ளிகாலையும் மாலையும் பெய்த மழையால் குருநகர், பாஷையூர், கொட்டடிப் பகுதி மக்கள் பலர் அகதிகளானார்கள்.

இராணுவ நடவடிக்கையினால் குருநகர், பாஷையூர், கொட்டடி பகுதிகளில் பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாகி இருந்தன.

மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிய அந்தப் பகுதி மக்கள் சிறு குடில்களை தற்காலிகமாக அமைத்தும், தமது உடைந்த வீடுகளைத் திருத்தியும் குடியேறினர்.

ஆனால் வெள்ளியன்றுபெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் அந்தப்பகுதி மக்கள் அகதிகளாகி பாடசாலைகளில் தஞ்சமடைந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (இ-3)

## வகுப்பேற்றப் பரீட்சையை ஜனவரியில் நடத்த உத்தேசம்

யாழ்ப்பாணம், அக். 21

இந்த வருடத்துக்கான பாடவிதானங்களை வகுப்பு ரீதியாக மீள ஒழுங்கு செய்து அவற்றின் அடிப்படையில், வகுப்புகளை நடத்தி அடுத்த ஆண்டு ஜனவரி பிற்பகுதியில் வகுப்பேற்றப் பரீட்சையை நடத்த யாழ்-கல்வி அலுவலகம் உத்தேசித்துள்ளது.

இது தொடர்பான வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கான விசேஷ கூட்டம் ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

இந்த திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஆசிரிய ஆலோசகர்களை இந்தக் கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். [இ-3]

## வீடு பார்க்கச் சென்றவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

புங்குடுதீவு, அக், 21

ஊர்காவற்றுறையில் இராணுவ நடவடிக்கைகாரணமாக தனது இருப்பிடத்தை விட்டு வெளியேறிய பெண் ஒருவர் மீண்டும் தனது வீட்டைப் பார்க்கச் சென்ற போது படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கனார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் வேலணை கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவியுடன் மானிப்பாய் போதனாவைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

திருமதி எம். சில்வெஸ்ரர் (வயது 35) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் ஆவார். (இ-131)

## ராணுவச் சிப்பாய் காலை இழந்தார்

யாழ்ப்பாணம், அக்.21

மட்டக்களப்பு. புதுக்குடியிருப்பில் கடந்த செவ்வாய் அன்று விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் காலை இழந்தார். (உ)

## குவைத்திலிருந்து திரும்பிய தமிழ் இளைஞர்கள் மீது வவுனியாவில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், அக், 21

செவ்வாயன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இளைஞர்கள் வவுனியாவில்வைத்துப் படையினரால் நையப் புடைக்கப்பட்டனர்.

குவைத்தில் இருந்து வந்து, கொழும்பில் தங்கி யிருந்த தமிழ் இளைஞர்கள் 16பேரை கொழும்பு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் ரயில் மூலம் கூட்டிவந்து, வவுனியாவில் விட்டுத் திரும்பினார்.

அவர்கள் வவுனியா அகதி முகாமுக்குப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சோதனை செய்யப்பட்டனர்.

அப்போது அவர்கள் கொண்டுவந்த பொதிகளைக் கத்தியால் குத்திக் கிழித்தும், சிலரைத் தாக்கியும் படையினர் பெரும் தர்பார் புரிந்ததாகவும் -

பெறுமதியான பொருள்கள் பலவற்றைக் கையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'குவைத்தில் வேலையிழந்து ஏதோ கையில் கிடைத்ததைக் கொண்டுவந்தோம். அவற்றையும் பறித்துவிட்டார்கள்' - என்று கவலையுடன் கூறினார் அந்தப் பதினைந்து இளைஞர்களுள் ஒருவர். (உ-3)

## படையினர் தாக்குதலை அடுத்து படகிலிருந்த மூவரைக் காணோம்

தாளையடி, அக். 21

இந்தியா நோக்கிச் சென்ற படகு மீது கடற்படை தாக்குதலை மேற்கொண்டதில் இரு குடும்பஸ்தர்கள் உட்பட மூவர் காணாமற்போய் விட்டனர்.

இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறையைச் சேர்ந்த இ சந்திரலிங்கம் [வயது 24] என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையும், சி. பாஸ்கரன் [வயது 23] என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், ச ஜெயசோதி [வயது 24] என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், நா. லிங்கேஸ்வரன் [வயது 19] என்ற இளைஞருமே படகில் பிரயாணம் செய்தவர்கள் ஆவர்.

படகு கரையிலிருந்து புறப்பட்டு சில நிமிட நேரத்தில் கடற்படைப் படகு எதிர்கொண்டு தாக்குதலை நடத்தியது.

ஜெயசோதி மட்டும், படகிலிருந்து குதித்து நீந்தி வந்து, பின்னர் மீன்பிடிப் படகு ஒன்றின் உதவியுடன் கரை சேர்ந்தார்.

பின்னர் மருதங்கேணி அரசினர் வைத்திய சாலையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (இ-164)

## வதந்தி படுத்தியபாடு

அச்சுவேலி, அக். 21

வளலாய் விமான நிலைய வீதியால் இலங்கை இராணுவம் முன்னேறி வருவதாக பரப்பப்பட்ட வதந்தியை அடுத்து வளலாய், தம்பாலை பத்தமேனி, அச்சுவேலிப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பதற்றம் அடைந்தனர்

வெள்ளி நண்பகல் பெய்த கொட்டும் மழையிலும் அகப்பட்ட பொருள்களுடன் புத்தூர் நீர்வேலிப் பகுதிகளை நோக்கி ஓடினர்.

அவ்வாறு ஓடியவர்கள் சில மணிநேரத்தில் உண்மை அறிந்து சொந்த இடங்களுக்குத் திரும்பினர். [அ-11]

## மீராவோடையில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், அக். 21

மட்டக்களப்பு மாவட்டம் மீராவோடையில் கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றைச் சுற்றிவளைக்க முற்பட்ட படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

[illegible] ரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

## கந்தபுராணக் கருவூலம்

### முருகவேளின் அவதாரம்

சூரபன்மன் தம்பியருடன் சிவபிரானை நோக்கி பதினாயிரம் ஆண்டுகள் வைராக்கியத்துடன் வேள்வி செய்தான். அரிய பெரிய தவத்தின் பயனாக பிருதிவியிலுள்ள ஆயிரங்கோடி அண்டங்களுள், ஆயிரத்தெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகம் ஆட்சி செய்யும் ஆணையையும். என்றும் அழியாத வச்சிர தேகத்தையும், சிறந்த படைக்கலங்களையும், அளவற்ற செல்வத்தையும், அண்டங்கள் அனைத்தையும் நொடியில் வலம் வரும் வலிமை கொண்ட 'இந்திர ஞாலம்' என்னும் தேரையும் சிவபிரானிடம் பெற்றான்.

ஆட்சியையும் அதிகாரத்தையும் இறைவனிடம் பெற்ற சூரபன்மனை ஆணவமும் மாலையும் ஆட்சி செய்யத் தொடங்கின. வானில் சஞ்சரித்த தேவர்களை ஏவலர்களாக்கி, அசுரர்களுக்கு மீன் பிடித்துக் கொடுக்குமாறு பணித்தான். நாராயணக் கடவுளும் பிரமனும் அவனுடைய ஆணைக்குப் பணிந்து நடந்தனர்.

சூரபன்மனின் கொடுமைக்கு அஞ்சிய இந்திரன், இந்திராணியோடும் ஏனைய தேவர்களோடும் மேருமலை சென்றான். சூரபன்மனின் மகன் பானுகோபன் பொன்னுலகமாகிய அமராவதியை எதிர்த்து மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறைப்பிடித்துச் சென்ற செய்தி கேட்டு மனம் வருந்தினான். துன்பத்தைத் தாங்கொணாத இந்திரன் மேருமலையின் ஒருபுறத்து இருந்து சிவபிரானை நோக்கித் தவம் செய்தான்.

இந்திரன்மேல் கருணை கொண்ட சிவமூர்த்தி அவன் முன் தோன்றி ''தேவராஜனே, நம்மை நிந்தித்து தக்கன் யாகம் செய்தபோது, அதில் நீயும் ஏனைய தேவர்களும் பங்கு கொண்டதால், சூரபத்மனால் துன்பம் அடைகிறீர்கள். வருந்தாதே சூராதி அவுணரை அழித்து உங்கள் துன்பத்தைப் போக்க வல்ல புதல்வனை விரைவில் தருவோம்'' எனக்கூறி மறைந்தருளினார்.

சிவபிரானின் நெற்றிக் கண்கள் ஆறிலும் இருந்து புறப்பட்ட அக்கினிப் பொறிகள் ஆறையும் இறைவனின் கட்டளைப்படி, வாயுதேவனும், அக்கினிதேவனும், கங்கையும் சரவணப்பொய்கையில் சேர்த்தனர். ஆறு பொறிகளும், சோதிப்பிளம்பே ஒரு திருமேனியாகவும் ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் கொண்டு உலகம் உய்யும் பொருட்டு முருகக்கடவுளாக திரு அவதாரம் செய்தருளின.

ஸ்கந்தசஷ்டி சிறப்பம்சம்

அழகு அருணாசலம்

*அருவமும் உருவமும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிளம்ப தோர் மேனியாக*
*கருணை கூர் முகங்கள் ஆறும் பன்னிரண்டும் கொண்ட*
*ஒரு திரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய*

## தோடம் கன்றுகள்

அதி சிறந்த இன, ஒரு வருஷத்தில் பலன் தரக்கூடிய தோடம் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஏமார்றத்தைத் தவிர்க்க முந்துங்கள். பகல் 12 மணிக்குப்பின் தொடர்புகொள்ளவும்.

பொ. துரைஐயா
நிலாவரையடி, நவக்கிரி, புத்தூர்.
(14459)

## WANTED IMMEDIATELY

RESIDENT DOCTORS or R. M. P.

with M.B.B.S or Registered Medical Practitioner for the Unified Medical Service of The Jaffna Diocese of the Church of South India.

Salary: Negotiable

Apply before 31-10-90 to:

THE MEDICAL SUPERINTENDENT,
Green Memorial Hospital,
MANIPAY.

(C/5323)

## யாழ். முச்சக்கர வண்டிச் சங்க அறிவித்தல்

வட பிராந்தியத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள் அனைவரும் 5 - 11 - 90 க்கு முன் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் இருக்கும் தற்காலிக சங்கக் காரியாலயத்தில் தங்கள் முச்சக்கரவண்டிகளை பதிவு செய்து கொள்ளும்படி பணிக்கப்பட்டுள்ளனர். பதியத் தவறிய முச்சக்கரவண்டிகளை 6 - 11 - 90க்குப்பின் சேவையில் ஈடுபடுத்த முடியாது என்பதை இத்தால் சங்கம் அறிவித்துள்ளது.

உபதலைவர்,
யாழ். முச்சக்கரவண்டிச்சங்கம்.

இல. 28, இராச வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

[14257]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமண் மீட்பில் தனது இன்னுயிர் ஈந்து
எம்மவர் நெஞ்சங்களிலே வாழ்கின்ற
மாவீரன்

## ★ சந்தோசம் ★

**(கணபதிப்பிள்ளை உமைநேசன்)**

அரியாலை
(திருமலை - யாழ் மாவட்டங்களின் முன்னைநாள் பொறுப்பாளர்)

அவர்களின்

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஈழத்தமிழ் மண்ணில்: 04 — 01 — 1959

ஈழத்தமிழர் மனங்களில்: 21 — 10 — 1987

அஞ்சாமை வீரம் அறிவுடைமை மண்காக்கத்
துஞ்சாது போரிட்டுத் தூயமனந் - கெஞ்சு ன்றும்
ஈழத்தமிழ்த் தாயை ஏத்தி வந்த சந்தோசம்
வாழத் தனையளித்தான் மாண்பு.

பாரதத்தின் பேரைப் பழுதாக்க வந்தவரைச்
சீரழித்து மேலுலகம் சேர்த்திட்டான் ஆரமெனச்
சாவை அணைத்த எம் சந்தோசம் பாவலரின்
நாவிற்குச் சொல்லளித்தான் நன்கு.

*சாவிற்கு சாவளித்துப் புழுக்கு வாழ்வழித்த*

சந்தோசத்திற்கு
எமது

## ★ வீர அஞ்சலி ★

சிற்றூரவை - அரியாலை கிழக்கு,
சிற்றூரவை - அரியாலை மத்தி,
சிற்றூரவை - அரியாலை மேற்கு.

(14509)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
01- 01- 1970

மறைவு:
21- 10- 1988



## நடராஜா சசிவண்ணன் [ரவி]

மண்ணிலே நலமாக வளமோடு வாழுவென
எண்ணியே யாமிருந்தோம் சசிவண்ணா ரவியென்றே
கண்ணியமாய்ப் பேரழைக்கக் கருத்தோடு கல்வியினை
நண்ணியே மானிப்பாய் மகாஜனா ஆங்கு கற்றாய்
நண்பரெலாம் போற்ற நாடுன்னை வாழ்த்திடவே
பண்புடனே மூவாறு ஆண்டுகள் நீ பார் மீது
உண்மையின் காவலனாய் ஊர் புகழ வாழ்ந்திருந்தாய்
கண்ணே கருணையிலா கயவர்கள் உனதுடலை
மண்ணுக் கிரையாக்கி வன்கொலை தான் செய்தனரே
விண்டு ஈராண்டு விரைந்துதான் சென்றகன்றும்
மீண்டும் உன் எண்ணம் மறக்குமோ நெஞ்சிடையே!

அம்மா, அண்ணை, அக்கா, அத்தான்,
அண்ணி, மகள், மருமக்கள், சுற்றத்தார்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(14489)

## அனைத்துக்கட்சி மாநாடு 28 இல்

கொழும்பு, அக். 21

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு மற்றும் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய கருத்து உடன்பாட்டை காணும் பதினெட்டு அரசியல் கட்சிகள் கலந்து கொள்ளும் அனைத்துக் கட்சி மாநாடு எதிர்வரும் 28 ஆம்திகதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

இம் மாநாடு கடந்த வியாழக்கிழமையன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறுவதாக இருந்தது.

தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்றே இம்மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ எ)

## கசிப்பு வேட்டை

ஆனைக்கோட்டை சேம சுந்தரம் வீதியிலுள்ள ஒரு வீட்டில் இருந்து 145 லீற்றர் கசிப்பு மானிப்பாய் பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் மீட்கப்பட்டது.

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதலாகின. (ஒ)

## மின்சாரம் வழங்க தென்னோலை தீப்பிடித்தது

நவாலி, அக். 21

மின்சாரம் வழங்கப்பட்டதும் பச்சைத் தென்னோலை ஒன்று திடீரென்று தீப்பிடித்து எரிந்தது.

இச்சம்பவம் ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

மின் கேபிளுடன் தென்னோலை முட்டிக்கொண்டிருந்ததே இந்த விபத்துக்குக் காரணம் ஆகும்.

இதனால் மின்விநியோகம் ஒருநாள் தடைப்பட்டு தற்போது மீண்டும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (இ-100)

### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**வைத்திலிங்கம் லகுபரன் (லகு)**

படைப்பு:
1 - 1 - 1958

அழிப்பு:
21 - 10 - 1987

ஆறாத்துயர் தந்து மீளாத்துயில்கொண்டு ஆண்டு மூன்று ஆனதடா. அன்பான லகுபரனே நீதி காக்க வந்த படை பாதியிலே அழித்ததுன்னை பாவிகள் நாங்கள் இங்கே பரிதவித்து இருக்கின்றோம்.

உமது பிரிவால்
துயருறும்:

தாய்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்,
மருமக்கள்

18/1 விதானையார்வீதி,
சுண்டிக்குளி.

[14500]


# ஞானம்ஸ் ஸ்ருடியோ

மீண்டும் மேற்படி ஸ்தாபனம் தனது வழமையான சேவையை கீழ் கண்ட விலாசத்தில் ஆரம்பித்துள்ளது. அத்துடன் [Photostat] செய்து கொடுக்கப்படும்.

**ஞானம்ஸ் ஸ்ருடியோ**
30, மணிக்கூட்டுகோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5325)

# JAFFNA ENGLISH ACADEMY

Toefl, Esol (London)
E. B. C (London), Spoken English
A/L English ஆகிய புதிய, பழைய வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன

நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்,

**9, Rakka Lane,
Chundikuli, Jaffna.**

[C 5317]


## OBITUARY

### Mrs. Lily Winifred Sittampalam

Beloved wife of late Mr Everard Sittampalam, precious mother of Sebastian, late Calistus, Eugene, Silverius. Jay. Maxi and Ponti died peacefully on October 9th Her remains were interred at streatham Park South London on the 18th. Friends and relations please accept this intimation

S. Sittampalam
(Son)

111/3, Beach Rd.,
Jaffna.

[14492]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா சிவகுருநாதன்

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த திருமதி அன்னம்மா சிவகுருநாதன் 18 - 10 - 90 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலம் சென்ற அப்பாத்துரை சிவகுருநாதனின் அன்பு மனைவியும், இந்திரா, சந்திரா, ஞானம், குலநாயகம் (பிரான்ஸ்). காலம் சென்ற குலசேகரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், மகேஸ்வரன் (ஓய்வு பெற்ற விகிதர் பெருந் தெருக்கள் திணைக்களம்), ஸ்ரீரங்கன் (ந. உ. யாழ். மாநகரசபை), தருமலிங்கம், ரேவதி (பிரான்ஸ்), மனோரஞ்சிதமலர் (இந்தியா) ஆகியோரின் மாமியாரும் காலம்சென்ற தம்பிஐயா, காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும், தங்கரத்தினம் (பிரான்ஸ்) மகாராணி ஆகியோரின் மைத்துனியும், திலீபன், ஜெயந்தினி, ஜெயந்தன், தர்ஷினி, சாமினி, ராதா, சீதா, கீதா, கௌசிகன், பௌசிகன், துஷியன், துசித்தா ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 19-10-90 வெள்ளிக்கிழமை உரும்பிராயில் நடைபெற்றன உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

'அன்னவில்லா'
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(14258)

## பொன்னம்பலம் நாகம்மா

புங்குடுதீவை பிறப்பிடமாகக் கொண்டவரும் இருபாலையை வசிப்பிடமாக கொண்டவருமாகிய பொன்னம்பலம் நாகம்மா 18-10-90 அன்று காலமாகி விட்டார். அன்னார் நாகரட்ணம், ராசம்மா, சிவராசா, பஞ்சாச்சரம், பரமானந்தம் (ஜேர்மனி), அருளானந்தம், யோசேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் தாயாரும், காலம்சென்ற தம்பிப்பிள்ளை, சின்னத்தம்பி, சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும், கிருஸ்ண பிள்ளை, அன்னலட்சுமி, மகேஸ்வரி (ஜேர்மனி), மனோன்மணி, காலம்சென்ற சின்னத்தம்பி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளி (19-10-90) இருபாலை மயானத்தில் நடைபெற்றன; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத் தருகிறோம்.

தகவல்:
அருளானந்தம்
(மகன்)

இருபாலை,
கோப்பாய்.

(14505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 3000 குடும்பங்கள் வைத்திய வசதிகள் இன்றி தவிப்பு

## வயிற்றோட்ட மரணங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 21

கிளிநொச்சி மாவட்டத்தில் நாச்சிக்குடா, நாகபடுவான், மண்ணித்தலை, கௌதாரி முனை ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள அகதிகள் வைத்திய வசதிகள் இன்றி உயிர் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

திருமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து அங்கு சென்ற 3000 குடும்பங்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

குழந்தைகள் வயிற்றோட்ட நோயால் இறப்பது அதிகரித்துள்ளதாகவும்—

போக்குவரத்து வசதியீனம், வைத்திய வசதியின்மை ஆகியவற்றால் இந்த வீணான மரணங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈப்பகுதியில் இயங்கிய முழங்காவில் மத்திய மருந்தகமும் பல மாதங்களாக இயங்கவில்லை. (இ-3)

## நெடுந்தீவுத் தபால்கள்

புங்குடுதீவு, அக். 21

யாழ் நகரில் இருந்து கொண்டுவரப்பட்ட நெடுந்தீவுப்பகுதிக்கான தபால் பொதிகள் புங்குடுதீவு பிரதம தபாற்கந்தோரில் தேங்கிக் கிடக்கின்றன.

ஊரடங்கு உத்தரவுகாரணமாக தீவுப்பகுதிகளுக்கிடையிலான படகுச்சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனாலேயே தபால் பொதிகளை நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லமுடியவில்லை என புங்குடுதீவு தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-131)

## இறக்கும் வேலை

யாழ்ப்பாணம், அக், 21

பருத்தித்துறையில் கொட்டும்மழையிலும் 'குமண' கப்பலில்இருந்துஉணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் நடைபெற்றன.

உணவுப்பொருள்கள் இறக்கப்பட்டு அங்கேயே களஞ்சியப்படுத்தப்படுகின்றன. (ஒ-3)

## தாக்குதல்களில் காயமுற்ற பொதுமக்கள்

யாழ்ப்பாணம், அக். 21

குடாநாட்டில் பரவலாக வியாழனன்று இடம்பெற்ற விமான, ஹெலித் தாக்குதல்களின் போது காயமடைந்து மானிப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:-

அருளம்பலம் (57 வயது) — சுட்டுவன், சிறிவரன் (28 வயது) —திருநெல்வேலி, திருமதி வி.மாணிக்கம் (55வயது) — வயாவிளான், செல்வி இந்து (17 வயது) — கோண்டாவில்,ரிஷான் (17 வயது) — பலாலி, பாலசுப்பிரமணியம் (40 வயது)—ஏழாலை,நாதன் (20 வயது) — பலாலி, கௌரி சாந்தன் (16 வயது)—பலாலி, சந்திரவதி (12 வயது) — தையிட்டி, றொபோ (19 வயது)— ஏழாலை, புவனேஸ்வரி (30 வயது)—ஏழாலை. (ஒ-3-5)

## உதயன்

### இரவிலும் தாக்குதல்

கடந்த நான்கு நாட்களாக பலாலிப் பகுதியில் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் போர் நடந்து வருகிறது.

கடந்த நான்கு மாதப் போரில் அரச படைகள் நிராயுதபாணிகளானதமிழ்ப் பொதுமக்களையே ஆயிரக்கணக்கில் கொன்று குவித்துள்ளன. ஆயுதபாணி ஒருவன் நிராயுதபாணியுடன் போர் புரிவது, யுத்த வரன்முறைகளுக்கு ஒவ்வாததாகும்.

ஆனால் தமிழ்ப் பகுதிகளில் நிராயுதபாணிகளான அப்பாவிப் பொது மக்களை ஆண்களை—பெண்களை—குழந்தைகளை — வயோதிபர்களை — நோயாளிகளை என்று அளவு கணக்கின்றி வான், கடல் தரைத் தாக்குதல்களால் படைகள் கொன்று வருகின்றன. அப்படிக் கொல்வதற்கு. "யுத்தத்தின் இடையில் அகப்பட்டு மரணமாவோர்" என்ற ஒரு வியாக்கியானத்தைக் கொடுத்து நிராயுதபாணிகளைக் கொல்லும் தமது கோழைத்தனத்தை அவர்கள் நியாயப்படுத்தி வருகின்றனர்!

பொதுமக்களை. நிராயுதபாணிகளைக் கொன்று ஒழிக்க வேண்டும் என்பதே அரசாங்கம் நடத்தும் யுத்தத்தின் நோக்கம். அவ்வாறில்லையெனில் பகல் நேரத்தில் மட்டுமன்றி இரவு நோக்திலும். நடுநிசியிலும் குடியிருப்புப் பகுதிகள் மீது வான், கடல் தாக்குதல்கள் நடத்துவது என்?

பலாலிப் பகுதியில் தான் யுத்தம். அதன் பொருட்டு அங்கிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள கொக்குவில், கோண்டாவில், தாவடி, மானிப்பாய், சங்கானை ஆகிய பகுதிகளில் மக்கள் ஆழ்ந்து துயில் கொண்டிருக்கும் வேளை ஹெலியிலிருந்து மக்கள் குடியிருப்புகளின் மீது தாக்குதல் நடத்துவதன் அர்த்தம் என்ன? இரவு வேளையில் குடியிருப்புப் பகுதிகளில் யுத்த களத்திற்கு அப்பாற்பட்ட பிரதேசங்களில் குண்டு வீசுவது சர்வதேச யுத்த விதிகளுக்கு முரணானதாகும்.

ஆனால் அரசாங்கப்படைகள் அவை எல்லாவற்றையும் மீறி, இரவு நேரத்தில் மக்கள் குடியிருப்புகளின் மீது ஷெல் குண்டு, பீரங்கி, ஹெலித் தாக்குதல்களை நடத்தி நெறிமுறை இல்லாத போர் புரிந்து வருகின்றன

பகலில் போராளிகளின் நிலையங்களைத் தாக்குவதாகக் கூறிக்கொண்டு பொது மக்கள் குடியிருப்புகளையும் உடைமைகளையுமே இலக்கின்றித் தாக்கி அவர்களைக் கொல்வது—

இரவு வேளைகளில் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தி மக்களைக் கொல்வது— என்பது நிராயுதபாணிகளான தமிழ்மக்களை ஆயுதபாணிகளான முப்படையினரும் கொல்லும அப்பட்டமான அநியாயம்

அந்தக் கோழைத்தனத்தின் இலக்கு நோக்கம் தமிழ் மக்களைக் கொன்று அவர்கள் இனத்தை அழிப்பதே என்பது தெளிவாக நிருபணம். இதனை வெளி உலகம் புரிந்து கொண்டு தட்டிக் கேட்கக்கூடாதா?

# அகழியை அண்டி புலிகள் சுற்றி வளைத்ததால் படையினர் தப்பி ஓட வேண்டிய நிர்ப்பந்தம்

## கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

### (IV)

கோட்டையிலிருந்து எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக ஓடித் தப்ப வேண்டும் என்ற எண்ணத்தை ஸ்ரீலங்காப் படைக்கு ஏற்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகள் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

அதை அறிவதற்கு கோட்டையின் அமைப்பினை வடிவத்தை நமது மனதில் ஒரு தடவை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஐங்கோண அமைப்பில்-ஐந்து முனைகளைக் கொண்டு அமைந்திருந்த கோட்டையின் மூன்று பக்கங்கள் அகழியால் சூழப்பட்டிருக்கின்றன என்பது வாசகர்களுக்குத் தெரியும்.

கோட்டையின் பிரதான வாயில் தென்கிழக்குத்திசையாக அமைந்துள்ளது. இந்த வாயில் பக்கத்தில் கோட்டைக்கு வெளியேயும் சுமார் 10 அடி உயரமுடைய வெளிப்புறக் கொத்தளம் ஒன்று அரணாக அமைக்கப்பட்டிருக்கிறது.

பிரதான கோட்டையையும் வாயிற்புறம் இருக்கும் வெளிப்புறக் கொத்தளத்தையும் பிரித்து நிற்கிறது அகழி.

இந்த அகழியை ஊடறுத்து வெளிப்புறக் கொத்தளப் பகுதியிலிருந்து கோட்டையின் பிரதான வாயிலை நோக்கி ஒடுங்கிய பாலம் போன்ற அமைப்புடையபாதை அமைக்கப்பட்டிருக்கிறது.

பிரதான வாயில் வழியே கோட்டைக்கு புகுவதற்கு இந்தப் பாதை ஒன்றையே பாவிக்க முடியும் கோட்டையின் பிரதான வாயிலின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, வெளியே அமைக்கப்பட்டிருந்த வெளிப்புறக்கொத்தளம், கோட்டை முற்றுகைக்குஉள்ளானபோது ஸ்ரீலங்கா படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

### சின்னக்கோட்டை

இது தவிர கோட்டையின் வடமேற்குத் திசையில் (பண்ணைப்பக்கமாக) அகழிக்கு வெளியே சின்னக்கோட்டை என்ற- சுரங்கப்பாதை அமைப்புக்களை கொண்ட- சிறிய கோட்டை அமைப்பு ஒன்று கட்டப்பட்டிருந்தது.

இந்தப் பக்கத்தில் வரக் கூடிய ஆபத்துகளைக் கோட்டைக்கு வெளியே வைத்தே முறியடிக்கும் நோக்குடன் சின்னக் கோட்டையை ஒல்லாந்தர் கட்டியிருக்கக் கூடும்,

கோட்டைக்கும் சின்னக் கோட்டைக்கும் இடையில் சுரி மற்றும் தண்ணீர் நிறைந்து காணப்படுகிறது ஓர் அகழி.

அகழி ஊடாக கோட்டையையும் சின்னக் கோட்டையையும் இணைக்கும் பாதை ஏதும் இப்போது கண்ணுக்குத் தெரியவில்லை.

கோட்டையில் இருப்பவர்கள் முன்வாசல் அல்லது பின் வாசல் வழியாக வெளியேறி கடற்கரை வீதிவழியாகச் சென்றே சின்னக் கோட்டைக்குள் புகமுடியும்.

கோட்டை முற்றுகைக்கு உள்ளானதும் படையினர் உள்ளே முடங்க அகழிக்கு வெளிப்புறத்தே இருந்த சின்னக் கோட்டை ஆள் அரவமற்ற இடமாயிற்று.

### புலிகளின்காவல்அரண்கள்

முற்றுகையின் ஆரம்பத்தில் கோட்டை அகழி அதற்கு வெளியேயுள்ள முற்றவெளி ஆகியவற்றுக்கு அப்பாலேயே விடுதலைப் புலிகள் தமது காவல்அரண்களை அமைத்திருந்தார்கள்.

பண்ணைச்சந்தி, தொலைதொடர்பு நிலையம், கொட்டடிச் சுடுகாடு, தபாற்கந்தோர், வீரசிங்கம்மண்டபம், திறந்தவெளி அரங்கு, பொது நூல்நிலையம், விளையாட்டரங்கு ஆகியவற்றில் அமைக்கப்பட்டிருந்த காவல் அரண்களில் மட்டும் விடுதலைப் புலிகள் தொடர்ந்து நிலை கொண்டு இருந்திருந்தால் கோட்டையை விட்டு ஓடும் எண்ணம் படையினருக்கு எழுந்திருக்காது

ஆனால் புலிகள் எல்லா முனைகளிலும் கிடுகிடுவென முன்னேறி கோட்டையை நெருக்கமாக சூழ்ந்து கொள்ளும் விதத்தில் தமது நடவடிக்கையைத் துரிதப்படுத்தி இருந்தார்கள்.

பண்ணைச் சந்தி, தொலைதொடர்பு நிலையம், கொட்டடி (வில்லூன்றி) மயானம் ஆகிய பகுதிகளில் இருந்த புலிகள் இரவோடு இரவாக நகர்ந்து சின்னக் கோட்டையை [illegible] வடமேற்குத் திசையில் கோட்டைச் சுவருக்கு 50 யார் தூரத்தில் தமது நிலையை நெருக்கமாக்கிக் கொண்டார்கள்.

### நெருங்கினர்

சின்னக்கோட்டையின்சுரங்கப் பாதைக்குள் நிலை கொண்டிருக்கும் போராளிகளையும், பண்ணைப் புறம் இருக்கும் அவர்களின் மற்றைய காவல் அரண்களையும் நீண்ட திறந்த வெளி பிரித்திருந்தது.

இந்த வெளியில் பகலில் நடமாட முடியாது. நடமாடினால் கோட்டையின் மேல் கொத்தளத்திலிருந்து சீறி வரும் வேட்டுகளுக்கு இரையாகி விட வேண்டியதாகி விடும்.

அதனால் சின்னக்கோட்டைக்குள் பதுங்கியிருக்கும் போராளிகளுக்கு எல்லா 'சப்ளை'களும் இரவில்தான் கிடைத்தன.

சின்னக் கோட்டைவரை முன்னேறியதைப் போன்று- தென்கிழக்குத் திசையில் துரையப்பா விளையாட்டரங்கு, பொலிஸ் நிலையம் ஆகியவற்றைத் தாண்டி முன்னேறிய புலிகள் கோட்டை வெளிப்புற கொத்தளத்துக்கு அருகே- பொலிஸ் விடுதிப் பகுதியில்- கூப்பிடு தூரத்தில்- தமது காவல் அரண்களை அமைத்து கோட்டை முன் வாயிலுக்கு நெருக்கமாக்கிக் கொண்டார்கள்.

இதேமாதிரி, வீரசிங்கம்மண்டபம், திறந்த வெளி அரங்கம், பொது நூல் நிலையப் பகுதிகளில் இருந்தும் எலிவளை போன்ற பதுங்குகுழிப் பாதைகள் முற்றவெளியை ஊடறுத்துக் கோட்டை அகழிவரை வந்தன.

### அகழியை சுற்றி வளைத்த போது.,..

தூரத்தில் அமைந்திருந்த

**- கூர்விழியான் -**

காவல் அரண்களில் இருந்து கறையான் புற்றெடுத்து வருவதுபோல. புலிகளின் பாதுகாப்பு வளைகள் இரவோடு இரவாக கிடுகிடுவென வளர்ந்து கோட்டை அகழிப்பகுதியைச்சுற்றிவளைத்த போதுதான் கோட்டைச் சிப்பாய்கள் நிலைகுலையத் தொடங்கினார்கள்.

அகழியால் சூழப்பட்ட மூன்று புறங்களிலும் அகழிக்கு அருகே புலிகள் நெருக்கமாக வந்து விட்டதால் அவர்களை ஷெல் குண்டுகள் மூலமோ, விமானத் தாக்குதல்கள்மூலமோ தாக்க முடியாத நிலை ஸ்ரீலங்காப் படைக்கு ஏற்பட்டது.

கோட்டைக் கொத்தளத்தில் உள்ள படையினரின் காவல் அரண்களுக்கு முப்பது யார் தூரத்தில் இருக்கும் புலிகளின் நிலைகளைத் தாக்கப் போய், இலக்கு சற்றுத் தவறினால் சிப்பாய்களின் காவல் அரண்கள் அல்லவா சிதறிப் போகும்?!

அகழியால் சூழப்பட்ட மூன்று புறங்களிலும் புலிகள் நெருங்கி விட்டார்கள்.

கடற்பக்கமாக - கடற்கரை வீதி ஓரமாக இருக்கும் கோட்டைப் பகுதியில்தான் புலிகளின் காவல் அரண்கள் இல்லாத நிலை; கடலுக்குள் காவல் அரண் அமைகக முடியாதே!

மூன்றுபக்கங்களில்நெருங்கி விட்ட புலிகள் அந்த மூன்று பக்கங்களில் இருந்தும் இரவு பகல் பாராது தமது தாக்குதல் கெடுபிடிகளை நெருக்கத் தொடங்கினார்கள்.

### படையினர் நிலை குலைந்தனர்

இந்தப் பக்கங்களில் இருந்து ஏவப்பட்ட ஷெல், பஸீலன் - 2000 போன்றவை கோட்டைக்குள் விழுந்து. வெடித்தபோது, கோட்டை உட்பக்கமும் அங்கிருந் கட்டடங்களும் அதிர்ந்தன; உடைந்து சிதறின; உள்ளே இருந்த படையினர் நிலை குலைந்தனர்.

### ஆகஸ்ட் 5 இல்

இப்படித் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருந்த போது .........

ஒரு நாள் ...... ஆகஸ்ட் 5 ஆம் திகதியன்று......அந்தச் சம்பவம் நடந்தது.

புலிகளின் காவல் அரண்கள் இல்லாத - இராணுவத்தினர் தமக்கு தொல்லை வராத-பக்கம் என்று நினைத்துக்கொண்டிருந்த - தெற்குப் புறமான கடற்கரையோரப் பக்கத்தில் இருந்துதான் அந்த நெருப்பு வெடித்தது.

நிலைகுலைந்து கதிகலங்கிப் போனார்கள் படையினர்.

ஓடித் தப்புவதைத் தவிர, வேறு வழி ஏதும் இல்லை என்ற தீர்க்கமான நிலைக்கு படையினரைத் தள்ளியது அந்தச் சம்பவம்.

படையினரைக் கதிகலங்க வைத்த - தென் புறத்தில் இடம்பெற்ற - அந்தச் சம்பவம் தான் என்ன? அடுத்த அத்தியாயத்தில் அதனைப் பார்ப்போம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21/10/1991

# செய்திச் சாரம்

## இரவு வேளையில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 21

வவுனியா நகரத்தில் உள்ள முகாம்களில் இருந்து இரவு நேரங்களில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த திங்கட்கிழமை பூந்தோட்டப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து இரவு நேரங்களில் பரவலாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. [இ-3-6]

## போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம். அக். 21

ஆனையிறவு கொம்படி வெளியில் மழை பெய்துள்ளதால் இப்பாதை ஊடான சகல போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளன. (இ-117)

## 2 ஆம் தர அதிபர்களாக தெரிவானோர்

தென்மராட்சி, அக். 21

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாம் தர அதிபர்களாக தெரிவு செய்யப்பட்ட எட்டுப் பேரின் பெயர்களை கல்விச்சேவை ஆணைக்குழு, கிளிநொச்சி கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களும், அவர்களது தற்போதைய பாடசாலைகளும் வருமாறு:-

எஸ். கே. சிதம்பரப்பிள்ளை (பளை ம. வித்தி.), வி. மாணிக்கம் (புலோலிப்பளை றோ.க.பா.), ரி. சணபதிப்பிள்ளை (பேரவில் இந்து ம. வித்தி.), எம். சண்முகராசா கிளி/ உருத்திரபுரம் ம. வித்தி.), என். சோதிநாதன் (கிளிநொச்சி ம.ம. வித்தி.), கே. சின்னராசா (அக்கராயன்குளம் ஆரம்ப பா.). திருமதி பி. மார்க்கண்டு (கிளிநொச்சி புனித திரேசா.ம.பா.), திருமதி ஈ. எஸ். ஜெயநேசன் (கிளிநொச்சி புனித திரேசா ம.பா.) (இ-117)

## மினிபஸ் சங்க கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல மினிபஸ் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரின் கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற உள்ளது.

வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம் வெளியிட்ட ஒரு செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விபத்தில் காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், அக். 21

டிரக்டர் விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாவற்குழியைச் சேர்ந்த சின்னத்துரை மகேஸ்வரன் (வயது 23) என்பவர் நேற்று மரணமானார்.

இவர் கடந்தவாரம் சைக்கிளில் தேங்காய் மூடைகட்டிக்கொண்டுவரும் போது கைதடிப் பாலத்தில் டிராக்டருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார். (உ-15)

## இன்று சம்பளம்

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் கடமையாற்றும் வெளிக்கள ஊழியர்கள் தமது சம்பளத்தை மானிப்பாயில் இயங்கும் யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் இன்று (ஞாயிறு) பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை—

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் தமக்குரிய கொடுப்பனவுகளை சங்கானை வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-15)

## கல்வியங்காட்டில் ஹெலித்தாக்கு

கல்வியங்காடு பகுதியில் நேற்றுப்பகல் 11 30 மணியளவில் இடம்பெற்ற ஹெலித்தாக்குதலில் மூவர் காயமடைந்தனர்.

சைக்கிளில் சென்ற ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த மயில்வாகனம் ஸ்ரீகாந்தன் (32 வயது) மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மற்றும் இருவர் சிறு காயங்களுக்கு இலக்கானார்கள். (ஓ-3-5)

## மிதிவெடியில் சிக்கிய சிப்பாய்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிங்கபுர இராணுவ முகாமிற்கு அருகில் விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கி கடந்த புதன் அன்று இராணுவச் சிப்பாய் ஒருவர் கால் இழந்ததாகக் கூறப்பட்டது. (உ)

# பலாலி முகாம் பகுதி மோதல்களில் 24 புலிகள் இதுவரை வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 21

பலாலி முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் கடந்த புதன், வியாழன். வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 24 பேர் வீர மரணம் அடைந்தனர்.

விக்டர் [புத்தளம்], ஷெல்டன் [நாவாந்துறை], ஐயன் [புத்தூர்]. ரஸீக் [பருத்தித்துறை], கிஷோகன் [இருபாலை], நெல்ஸன் [பூநகரி], ரஹீம் [சாவகச்சேரி], கந்தையா [கரவெட்டி], தமிழ்ச்செல்வன் [மன்னார்], நஸார் [மூளாய்], ரகு [அளவெட்டி], மரியதாஸ் [வல்வெட்டித்துறை], அனுஷன் [தெல்லிப்பளை], சீனன் [நீர்வேலி] ஆகியோரும் —

செல்வம் (பருத்தித்துறை), சுகந்தன் (முல்லைத்தீவு), சின்னமணி (உரும்பராய்), அமுதன் (உரும்பராய்), மூவின்(இளவாலை), சேனாட் (நாகர் கோயில்), சதீஸ் (வல்வெட்டித்துறை), அன்ரனி (கல்முனை) ஆகியோரும்—

பெண் போராளிகளான ஆர்த்தி (கோமதி – ஆரையம்பதி), பற்றீஷியா (முல்லைத்தீவு) ஆகியோருமே வீரமரணமடைந்தவர்களாவர். (உ)

## கூரையிலிருந்து விழுந்து படுகாயம்

யாழ்ப்பாணம், அக். 21

புறாப் பிடிப்பதற்கு தேர்முட்டியில் ஏறிபவர் கூரையின் "சீற்" உடைந்ததால் கீழே விழுந்து தலையில் படுகாயம் அடைந்தார்.

கோண்டாவில் உப்பு மடம் பிள்ளையார் கோவிலில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றது

இச் சம்பவத்தில் படுகாயமுற்ற கொக்குவில் காளி கோவிலடியைச் சேர்ந்த அப்புத்துரை ஜீவா (வயது 15) மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## வவுனியாவில் வங்கிகள் இயங்குகின்றன

யாழ்ப்பாணம், அக்.21

வவுனியா நகரில் உள்ள வங்கிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

மக்கள்வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி ஆகிய கிளைகளே திருத்தப்பட்டு செயற்படுகின்றன.

காலை 9மணிமுதல் 10மணி வரை இயங்கும் பிரஸ்தாப வங்கிகளில் ஓரளவு கொடுக்கல், வாங்கல் வேலைகளும் நடைபெறுகின்றன. (ஓ-3-6)

## மல்லாகத்தில் ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சறோன் [16 வயது], டிபான் (13 வயது) மற்றும் கடையில் வேலை செய்து வந்தவர்களான அளவெட்டியைச் சேர்ந்த ஜீவா [15 வயது], சதீஸ் [16 வயது]-அச்சுவேலி, சுப்பிரமணியம் [25 வயது]—மல்லாகம், மு. கருணாநிதி (24 வயது)—பதுளை ஆகியோரும் பாக்கியம் நவரத்தினம் (47 வயது)—மல்லாகம் என்பவர் உட்பட்ட எண்மரே காயம் அடைந்தனர்.

இதேவேளை—

மயிலணியிலும் சகடை விமானம் குண்டு வீசியது. அதில் வீடு ஒன்று தரைமட்டமானது.

மல்லாகத்தில் நீதிமன்ற வீதியில் வீசப்பட்ட குண்டு வெடிக்கவில்லை. ஊரங்குளை ஏழாலை பகுதிகளிலும் பல சகடைக்குண்டுகள் விழுந்து வெடித்தன. [ஓ-15-3-5-143]

## ஆஸ்பத்திரி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேவையை செய்வதற்காக, நெருக்கடியான வேளையிலும் ஆஸ்பத்திரிக்கு கடமையுணர்வுடன் சென்ற அவர்களை இந்திய இராணுவத்தினர் 1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ஆம் திகதி துடிக்கத் துடிக்கச் சுட்டுக் கொன்றனர்.

தமது சக ஊழியர்கள் கொலையுண்டதை நினைவுகூர்ந்து, அவர்களின் ஆன்ம சாந்திக்காக யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர் மௌனாஞ்சலி செலுத்துவர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 1987 அக்டோபரில் [illegible] நடந்த அசம்பாவிதங்களில் நோயாளர் உட்பட [illegible] பேர் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-15)

## வலி. வடக்கிலிருந்து மக்கள் நேற்றிரவும் இடம்பெயர்வு

வலிகாமம் வடக்குப் பகுதியின் பல கிராமங்களையும் சேர்ந்த மக்கள் நேற்றும் தமது சொந்த வீடுகளை, உடைமைகளை விட்டு வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

இதுவரை இடம்பெயராமல் இருந்த மக்கள் நேற்றிரவு (சனிஇரவு) தூரஇடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

கட்டுவன், ஏழாலை, ஊரெழு. குரும்பசிட்டி, மல்லாகம், சுன்னாகம் ஆகிய பகுதிகளிலிருந்தே பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இவர்களில்பலரும் குழந்தை குட்டிகளுடன் தூக்கிச் செல்லக்கூடிய பொருள்களுடன் மானிப்பாய். மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், சங்கானைப் பகுதிகளை நோக்கி மாலை நேரத்திலும், இரவிலும் சாரி சாரியாகச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி, கந்தையா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளிலும் மற்றும் பல ஆலயங்களிலும் மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேவேளை தெல்லிப்பழை துர்க்கை அம்மன்கோவிலில் ஏற்கனவே மயிலிட்டி., காங்கேசன்துறைப் பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்து அகதிகளாக வந்திருந்தவர்களில் பெரும்பகுதியினர் அங்கிருந்து வேறு இடங்களுக்கு மாறினர்.

தெல்லிப்பழைப் பகுதியில் அடிக்கடி ஷெல்கள் வந்து விழுந்ததைத் தொடர்ந்து அச்சத்தின் நிமித்தம் அவர்கள் இடம்மாறினர். (அ-3-5)

## தேசிய முன்னணி அரசு கவிழும் ஆபத்து!

புதுடில்லி, அக். 21

ராம ஜன்ம பூமி – பாபரி மஸ்ஜித் பிரச்சினையால் இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் தேசிய முன்னணி அரசு கவிழும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ராம ஜன்ம பூமியில் ராமர் கோயிலைக் கட்டும் தமது தமது திட்டத்தின் முன்னோடி நடவடிக்கையாக அயோத்தியை நோக்கி தமது ரத யாத்திரையை பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி ஆரம்பித்துள்ளார்.

இந்த ரத யாத்திரையை தடை செய்யும்படி தேசிய முன்னணி அரசை மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் வற்புறுத்திக் கேட்டுள்ளன.

ஆனால்—

இம்மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ராமர் ஆலய கட்டுமானப் பணியைத் தடுத்தாலோ, அல்லது தமது ரதயாத்திரையை நிறுத்தினாலோ, அல்லது தம்மைக் கைது செய்தாலோ தேசிய முன்னணி அரசுக்கு தமது கட்சி வழங்கி வரும் ஆதரவை விலக்கிக்கொண்டு விடும் என பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எல். கே அத்வானி உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் தேசிய முன்னணி அரசு இரு கம்யூனிஸ்ட் கட்சிகளினதும், பாரதீய ஜனதாக் கட்சியினதும் ஆதரவு இருந்தால் மட்டுமே ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

இந்த நிலையில் ராம ஜென்ம பூமி விவகாரத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகளும், பாரதீப ஜனதாவும் எதிர் எதிராக நின்று கொண்டு தேசிய முன்னணி அரசுக்கு மிரட்டல் விட்டு வருகின்றன).

இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு தேசிய முன்னணித் தலைவர்கள் பல மட்டத்தில் எடுத்த நடவடிக்கைகள் இதுவரை வெற்றியளிப்பதாக அமையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## ரஞ்சனின் கிண்டலுக்கு கண்டனம் தெரிவிப்பு

மணிலா, அக். 21

"யாழ்குடா நாட்டில் தீபாவளி தினத்தன்று இலங்கை இராணுவம் தாக்குதலை ஆரம்பித்ததை "வயாவிளானில் படையினர் இன்று பட்டாசு சுடுகின்றனர்" என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா செய்தியாளர் மாநாட்டில் கூறி கிண்டல் பண்ணியிருப்பது பெரும்பாலான இந்து தமிழரை புண்படுத்துவதாக அமைந்துள்ளது.

தமிழர்கள் இலங்கை அரசு மீது வைத்துள்ள சிறியளவு நம்பிக்கையைக்கூட இழக்கச் செய்வதாக உள்ளது. இதனை ஜனாதிபதி பிரேமதாசா கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" – என்று வெரித்தாஸ் வானொலியின் 'உண்மையின் எண்ணங்கள்' நிகழ்ச்சியில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

## மாட்டுவண்டியில் திரும்பும் வடமராட்சி அகதிகள்

சாவகச்சேரி, அக். 21

வடமராட்சியில் இருந்து சாவகச்சேரிப்பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்த சில குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கி உள்ளன.

பிரயாண வசதிகள் இல்லாததால் மாட்டுவண்டிகளில் இவர்கள் செல்கின்றனர்.

கட்டணமாக500ரூபாமுதல் 600 ரூபாவரை அறவிடப்படுகிறது.

சந்தைக்கு வரும் லொறிகளிலும் ஏறி சிலர் தமது சொந்த இடங்களுக்குச் செல்கின்றனர். ஆளுக்கு நூறு ரூபாவீதம் லொறி உரிமையாளர்கள் அறவிடுகின்றார்களாம். (இ-31)


## முக்கிய அறிவித்தல்

Sony 363, கஸ்தூரியார் வீதியில் என்னிடம் T. V. றேடியோ திருத்துவதற்கு கொடுத்தோர் தயவு செய்து 22-10-90 தொடக்கம்30-10-90க்கு இடையில் காலை 8 மணி தொடக்கம் 10மணிக்கு இடையில் வந்து அதே இடத்தில் பெற்றுக் கொள்ளவும்.

-ச. சுபாஸ்சந்திரன்.

[14511]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 10 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org